RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s1016

OPEN ACCESS

# ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதையில் அடித்தள மக்கள் வாழ்வியல்

**க. கார்த்திகா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, மங்கையர்க்கரசி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுரை- 625402, தமிழ்நாடு, இந்தியா.

# The Life of the Working Class People in Andal Priyadarshini's Short Story

**K. Karthiga** [a, *]

[a] Department of Tamil, Mangayarkarasi College of Arts & Science for Women, Madurai-625402, Tamil Nadu, India.

* Corresponding Author: karthigapriya003@gmail.com

Received: 18-09-2021
Revised: 24-05-2022
Accepted: 30-05-2022
Published: 12-08-2022

Check for updates

**ABSTRACT**

It can be seen from the development of literature that literature is an inseparable part of human life. Literature has reflected human life from time to time, and in that way, from the Sangam period to the present, literature is able to clearly understand the human way of life. Literature attests to the fact that human beings have been living a life in harmony with nature. Along with the change of times, literature has developed to the next level and has evolved into modern literature. Andal Priyadarshini's collection of short stories has recorded the daily life problems of the people of the lower class so that, despite the development of various technologies, the lives of the lower class people have not changed. Through this research, we can know that the condition of the people who live on the roadside without getting even a single meal, the people who suffer from untouchability, and the life of the poet has not changed the lifestyle of the basic people, but it is understood that some people have recited these short stories on rainy days after eating poetry and starving.

**Keywords:** Andal Priyadarshini, Biography, Lower Class People, Lifestyle

## முன்னுரை

மனிதன் என்பவன் தனி ஒருவன் அல்லன். அவனைச் சார்ந்தே பிற மனிதர்களும் மற்ற உயிரினங்களும் வாழ்கின்றன. மனிதன் சில வேளைகளில் தன் தனிப்பட்ட விருப்பங்களையோ, தன்னைச் சார்ந்த பிறரின் விருப்பங்களையோ வெளிப்படுத்த தயங்குகிறான். இதற்கு சமூகப் பார்வையில் அவனின் விருப்பங்கள் எத்தகைய விளைவை ஏற்படுத்துமோ என்னும் பய உணர்வே காரணமாகின்றது. மனிதப் பார்வையில் சமூகம் எத்தகைய இடத்தைப் பெறுகிறதோ, அதைப் போலவே சமூகத்தில் மனிதனும் முக்கிய இடத்தைப் பெறுகிறான். மனிதனின்றிச் சமூகம் எவ்வாறு இல்லையோ, அவ்வாறே சமூகம் இன்றி மனிதனும் இல்லை. மனிதனும் சமூகமும் ஒன்றோடொன்று இணைந்து தான் இருக்கின்றன. இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி. அவை மனித வாழ்வின் காலத்தை வெளிக் காட்டுகின்றன என்பதைப் பல்வேறு இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. அந்த அடிப்படையில் ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகள் எங்ஙனம் சமூகத்தைச் சித்திரித்துள்ளன என்பதை ஆராய்வதாக அமைகின்றது.

## சமூகம் - சொல் விளக்கம்

சமூகம் என்பது தனி மனிதர்கள் கூடி வாழும் குழுமம். இக்குழுமம் என்பது குடும்பம், சாதி, மதம், மொழி, இனம், வகுப்பு, கிராமம், நகரம், ஆண், பெண் என வெவ்வேறு குழுமங்களாகப்

பிரிக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட குழுமங்கள் ஏன் தேவை என்பதற்குப் பற்பல காரணங்களும் கூறப்படுகின்றன. ஒரு மனிதன் என்பவன் தனித் தீவு அல்ல. சமூகத்தில் வாழும் போது தான் மனிதன் மனிதனாக உணரமுடியும். குழுமமாக வாழ்வதால் மனிதனின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

"பன்நெடுங்காலம் ஒன்றாக கூடி வாழ்ந்தாலும்

தொழில் புரிந்து வாழும் மக்கள் கூட்டத்தைச் சமுதாயம்"

என்று குறிப்பிடுகின்றனர் (Trevelyan -1994).

"சமூகம் மனித வர்க்கத்தினரால் உருவானது"

என அறிஞர் எல்.கு. பாஸ்கல் கில்பர்ட்டு குறிப்பிடுகிறார் (Pascal Gilbert, 1961).

"ஒவ்வொரு மனிதனும் ஏனைய மனிதனுடன் கொண்டிருக்கும் சமூக உறவுமுறைத் தொடர்புகளைத் தான் சமூகம் என்கிறோம் அல்லது சமூகம் என்பது புலனாகா உளச் சார்புடைய கருத்தியல் ஆகும்" என்கிறார் (Varatharasanar, 1972). "ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே சமூகம்" (Kalaikalanjiyam, 1995). என்று தமிழ்க் கலைக்களஞ்சியம் விளக்கம் அளிக்கிறது. இக்கூற்றுக்களை நோக்கும் போது சமூகத்தில் மனிதன் முக்கிய பங்கு வகிக்கிறான் என்பதையும் உணரமுடிகிறது.

## பொருளாதாரச் சூழல்

மனிதனின் அடிப்படைத் தேவை பொருளாதாரம். இச்சூழல் நன்கு அமையுமிடத்து அவனுக்குச் சமூகத் தேவைகள் பூர்த்தி செய்ய ஏதுவாகிறது. இல்லாத சூழலில் வறுமை நிலை ஆரம்பமாகிறது. மனிதன் இந்த வறுமை என்னும் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளப் பெரிதும் போராடுகிறான்.

"ஏழையெளியவர்கள் வீட்டில் இந்த

ஈன வயிறு படும் பாட்டில்"

என்னும் பாரதியாரின் பாடல் வரிகளும் ஏழைகளின் வறுமையைக் காட்டுகின்றன (Subburaaj, 2011).

"மழை நாளின் சில மனிதர்கள்" கதையில் சாலையோரத்தில் வசிக்கும் ஏழையான தனமும் அவளது குடும்பமும் வறுமையின் பிடியில் சிக்கி வாழ்வதை,

"ரெண்டு குடம் ஊைத் தண்ணி புடிச்சேன் லாரி தண்ணி

காசு மிச்சம்"

என்ற வரிகள் விவரிக்கின்றன (Andal Priyadarshini, 2009). இதில் தங்களது அன்றாடத் தேவையான குடிநீரை வாங்கும் பணத்தைக் கூடச் சேமித்துச் சிக்கனமாக வாழ்கின்ற நிலையை உணர்த்துகிறார் ஆசிரியர். மேலும் மழை நாள்களில் வேலை கிடைக்காது பட்டினியுடன் தனத்தின் குடும்பம் இருப்பதை, "மழைக்காலம் வந்தாலே எமனின் வருகை மாதிரிதான் சொட்டுச் சொட்டாய் எமனே பெய்வது மாதிரி இருக்கும் வீட்டுக் கட்டுமான வேலை நின்றுபோனது, கொத்து வேலை கிடைக்கவில்லை, மண்வெட்டவும், செங்கல் சுமக்கவும், பாண்டு தூக்கவும், வேலை இல்லாமல் கூலி இல்லாமல் கஞ்சியும் இல்லாதது மாதிரி பசியும் பசியும் இல்லாது போகிறதா என்ன? அரைசாண் வயிறு ஆறடி நீளத்துக்குப் பசிக்கிறது. அஞ்சு நாளாகிறது சாப்பிட்டு போன வாரக் கூலி வாங்கி வந்த போது இட்லிக்கார ஆயாவிடம் தந்தாங்கு இட்லி, சுடச் சுடச் சட்டினியும் சாம்பாருமாய் விரவித் தின்றதோடு சரி. இந்த நிமிஷம் வரை தண்ணீர் தான் வயிற்றை நிரப்புகிறது" (Andal Priyadarshini, 2009). என்னுமிடம் வழி அறியமுடிகிறது. வேலையும் கிடைக்காது, பசியால் வாடி, ஒரு வேளை உணவிற்காகப் போராடும், நிலையினை ஆசிரியர் சுட்டியுள்ளார்.

"இந்தாய்ய, நீ ஒரு வா ஊத்திக்க, உசிருவந்துச்சு

இப்பத்தான்..."

வறுமையைப் பகிர்ந்து கொண்டது நேசம்" (Andal Priyadarshini, 2009)

என்ற தங்களது வறுமையைத் தங்களுக்குள்ளேயே பகிர்ந்து கொண்டு வாழ்கின்றனர். வறுமையிலும் தங்களது நாய்க்குச் சிறிது டீயை ஊற்றி வறுமையிலும் பகுத்துண்டு வாழ்கின்றது தனத்தின் குடும்பம். இவ்வாறு மனிதனின் அடிப்படைத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் இவை இல்லாது வாழும் ஏழை மக்களின் வாழ்வினை ஆசிரியர் சுட்டி, மேலும் வறுமையினால் ஏற்படும் துயரத்தைச் சமூகத்தில் மனிதர்கள் உணர்ந்து வறுமையினைப் போக்கும் முயற்சியினைச் செய்திட வேண்டும் என்ற கோரிக்கையையும் ஆசிரியர் கதாபாத்திரங்கள் வழி முன்வைக்கிறார்.

சமுதாயத்தில் ஏழை, பணக்காரர் என்ற பாகுபாட்டினால் இச்சமூகமே நிலைகுலைந்துள்ளது. இப்பாகுபாடு இல்லாமல் அனைவரும் சமம் என்று வாழ்ந்தால் தான் இவ்வுலகம் சிறப்புறும். இதனையே,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்கிறார் கணியன் பூங்குன்றனார் (Avvai Duraisamy pillai, 2010). ஆனால் ஏழை, பணக்காரர் என்ற பாகுபாட்டினால் தாழ்வு மனப்பான்மை மக்களிடம் உருவாகின்றது.

"கவிதையைத் தின்று பசியாறி" என்னும் கதையில் வரும் ஜீவா, தன்னுடைய கவிதைத் திறன் வழி தன் வாழ்வில் மட்டுமல்லாது, அவனது மனைவி சரஸ்வதியின் தேவையையும் பூர்த்தி செய்கிறான். எனினும், தன்னுடைய அடிப்படைத் தேவையை மனைவி, "சோறு இல்லேன்னா கூடப் பரவாயில்லை. தண்ணி, டீ, கஞ்சின்னு எதையாச்சும் சாப்பிட்டுக்கலாம். பட்டினியே சுடக் கிடந்துக்கலாம் ஜீவா இது இல்லாமச் சமாளிக்கத் தெரியல்ல வேற பயன்படுத்தினா பிரச்சனையாயிருது; புண்ணு, அரிப்பு, எரிச்சல்னு தோல் வியாதி வருது. மாசம் மாசம் இந்த பிரச்சனையால் கஷ்டமாயிருக்கு ஜீவா வாங்கித்தர்றியா?" என்று முன்வைக்கிறாள். இந்த அடிப்படை தேவையினைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில், அவன் கருத்தரங்கு சென்று அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு வாங்கி வருகிறான். ஆனால் அப்போது அவள் கருவுற்றதால் ~நாப்கின்| தேவைப்படவில்லை (Andal Priyadarshini, 2009). ஆனாலும் அவர்களது பொருளாதாரத் தேவையினால் குழந்தைப் பிறப்பைச் சரஸ்வதி விரும்பவில்லை. இதனை,

"இது வாங்கின வேளை இன்னொரு பத்து மாசத்துக்கு

அப்புறம் தான் இதுக்கு வேலை..."

"ஒரு வேளைச்சோத்துக்கே காசில்லாமப் பரிதவிக்கிறோம் இப்பவே இது வேணுமா ஜீவா? நமக்கு வயசு இருக்கு. கால் ஊனி நின்னப்புறம் பார்த்துக்கலாமா? டாக்டர்கிட்ட சொல்லிடவா?"

என்று சரஸ்வதி வாயிலாக வெளிப்படுத்துகிறார் ஆசிரியர் (Andal Priyadarshini, 2009). இவ்வாறு சரஸ்வதி கூற்றின் வழி உணவு, உடை, இருப்பிடம் பற்றிய கவலையை விட பொருளாதாரச் சிக்கல் பெரும் பிரச்சனையாகக் காணப்படுகிறது. சமுதாயத்தில் மனிதர்களுக்குப் பணம் சம்பாதிப்பது பெரிய சவாலாக உள்ளது. ஒரு வேளை அவன் வெற்றி அடைந்து விட்டால் உயர்வு நிலைக்குத் தள்ளப்படுகிறான். இல்லையெனில் சமூகத்தில் ஒருவனாக அன்றாட வாழ்விற்குப் போராடுபவனாக உள்ளான் என்னும் கருத்தைச் சிறுகதைகள் முன்வைக்கின்றன. மேலும் ஒரு பெண் தனது அடிப்படைத் தேவையினைப் பெறவும், தன் கணவனை நாடும் விதம் ஒவ்வொரு பெண்ணுக்கும் உள்ள சிக்கல் ஆகும். மேலும் பொருளாதார அடிப்படையில் குழந்தையைப் புறக்கணித்தல் நிலையினைக் கூறுவதில், சமூகத்தில் மாற்றம் நிகழ்தலை விரும்பும் ஆசிரியரின் மனப்பாங்கினை அறிய முடிகிறது. பொருளாதாரத்தில் சம நிலை அடைய வேண்டும்; அனைவருக்கும் அனைத்து தேவைகளும் பூர்த்தியாக வேண்டும் என்பதனை இதன்வழி உணர முடிகிறது.

## திறமைகள் மறுக்கப்படல்

சமூகத்தில் படைப்பாளிகள் சமூகத்தைத் தங்களது படைப்புகளில் பிரதிபலிக்கின்றர். சில படைப்புகள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. சில படைப்புகளும் சக படைப்பாளிகளை விமர்சனம் செய்கின்றன. படைப்பாளியின் திறமைகளும் மறுக்கப்படுகின்றன. வளர்ந்த கவிஞன் வளரும் கவிஞனை வளரும் கவிஞன் வளர்ந்த கவிஞனைச் சாடுதலும் சமூகத்தில் நிகழுகின்றன. இக்கருத்தை ஆசிரியர் "கவிதையைத் தின்று பசியாறி" என்னும் கதையில் ஜீவா கதாபாத்திரம் வழி விளக்கியுள்ளார். ஜீவா என்பவன் வளரும் கவிஞன். தனது கவிதைப் பிரசுரத்தின் வழி உணவு தேவையைப் பூர்த்தி செய்கிறான். ஒரு கருத்தரங்கில் தன் கவிதைத் திறனை வளர்ந்த கவிஞர்கள் முன் வெளிப்படுத்த எண்ணுகிறான். ஆனால், அவனைத் தாழ்ச்சி அடையச் செய்கின்றனர்.

"அவனுக்கு எப்படி அந்த விருது கிடைச்சது? ம்? என்னத்தை எளுதிக் கிளிச்சான்? நல்லா சோப்புப் போடுவான். நாயி பூரி சன்னாவோடு எல்லாரையும் மென்றார்கள். சிற்றிதழ் படைப்பாளிகள் வானம் பார்த்த பார்வையோடு நடனமாடினார்கள். ஜனரஞ்சக எழுத்தாளர்கள் இலக்கிய நச்சுருவிகள் என நினைத்து ஒதுக்கினார்கள்" என வளர்ந்த கவிஞர்கள் சிறு கவிஞரை மற்றும் தன்னுடன் வளர்ந்த கவிஞர்களை, எள்ளி நகையாடி அவர்களைத் தாழ்வுபடுத்தும் நிலையினை ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ளார் (Andal Priyadarshini, 2009). மேலும் வளரும் படைப்பாளர்கள் நிலையினைப் படைப்பாளர் போட்டி நிலையினைச் சமூகத்தில் நிகழும் சம்பவங்களை எடுத்துரைத்துக் கவிஞர்கள் யாரும் யாருக்கும் கீழான நிலை கூடாது வேண்டும் என்பதனை ஆசிரியர் உணர்த்தியுள்ளார்.

## தீண்டாமை

மனிதன் ஒரு பிரிவினைத் தீண்டத் தகாதவர்கள் என ஒதுக்கி வைக்கும் உணர்வு தீண்டாமையாகும். சமுதாயத்தில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடு என்று தோன்றியதோ அன்றே சமூக நிலை தாழ்வடைந்தது. இதனைக் கண்ட பாரதி,

"ஏழை யென்றும் அடிமை யென்றும்

எவரும் இல்லை ஜாதியில்

இழிவு இழிவு கொண்ட மனிதரென்ப

இந்தியாவில் இல்லையே"

எனப் பாடி சாதியை ஒழிப்பதற்குத் துணை நின்றார் (Padmadevan, 2007). இதையே "கழிவு" என்னும் சிறுகதையில் வரும் சோமையா மனிதக் கழிவினை அள்ளும் தொழில் செய்கிறார். சாதி ரீதியாக, அவரை ஒதுக்கி வைக்கின்றார்கள். அவர் தொட்டால் தீட்டு என்று அவரைத் தீண்டத் தகாதவராகக் கருதுகின்றனர். இதனால், "மள பெஞ்சாத்தான் நரகம். அள்ளறப்ப மளைத்தண்ணியும் சேந்து வழியும். கூடைல தூக்கிப் போறப்ப மூஞ்சி மொகரையெல்லாம் வழியும். தேச்சித் தேச்சிக் குளிச்சாலும் - தேங்கா நாறு தான் தேயும். ஆத்துக்குள்ளேயே மூங்கிக் கெடந்தாக் கூட நாத்தம் போவது எத்தினி தரம் கழுவினாலும் கையால அள்ளிச் சோறு திங்க வெளங்காது தாகத்துக்குத் தண்ணி புடிச்சிக் குடிக்க ஏலாது. வீட்டு மவராசிங்க ஒரு வாய்க் கஞ்சியக் கூட இருபதடி தள்ளி தான் வைப்பாங்க மூக்கைப் பொத்திட்டு ஓடிப்புடுவாங்க" என அவரது தொழிலால் ஒதுக்கி வைக்கின்றனர் (Andal Priyadarshini, 2009). தன்னைப் போல் சக மனிதன் என்று கூட எண்ணாது தீண்டத்தகாத உயிரியாக எண்ணும் மக்களின் எண்ணத்தையும், தீண்டாமைப் பிடியில் சிக்கி வாழும் ஒடுக்கப்பட்ட மக்களது நிலையினையும் அவர்கள் சமுதாயத்தில் நடத்தப்படும் விதம் குறித்தும் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். மனிதனை மனிதனாக எண்ண வேண்டும் என்பதை இதன் வழி ஆசிரியர் சுட்டுகிறார்.

"தாயி தப்பா நெனைக்காத இந்தப் புள்ளைங்களை நா தொடவா? மடில போட்டுக்கவா? தொட்டா தீட்டு. பட்டா நாத்தம்னு புடுங்கிப்பியா தாயி?." என்று வருமிடத்திலும் சோமையாக்குள் எண்ணும் எண்ண வெளிப்பாட்டினை, தீண்டாமையினால் மனதளவில் வருந்தியுள்ளதை இவ்வரிகள் வழி அறிய முடிகிறது (Andal Priyadarshini, 2009). ஆசிரியர், தீண்டாமையின் வழி, அவர் படும் துயரையும் சமூகத்தில்

அவர் படும் வலியினையும் வேதனையும், உறவுகளால் சக மனிதர்களால் ஒதுக்கப்பட்டுத் தனி மனிதனாக வாழும் அவல நிலையினையும் வெளிப்படுத்தியுள்ளார். மனத்தால் உயர்வு தாழ்வு கருதாது ஒன்றுபட்டு காண்பதே சிறந்தது என்பதனை ஆசிரியர் உணர்த்துகிறார்.

## முடிவுரை

சமூகமானது தோன்றிய நிலையில் இல்லை. சமூகம் பலவித மாறுதலுக்கு உள்ளாகிறது. அதுபோல மனிதனும் தன்னை மாற்றிக் கொள்கிறான். சமூகத்தில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளும் மனிதனை அடிப்படையாகக் கொண்டே நிகழ்கின்றன. அவற்றில் நன்மைகள் அல்லது தீமைகள் அடைவதும் செயல்களின் தன்மைகளைப் பொறுத்தே அமைகிறது. இலக்கியவாதிகள் அனைவரும் தாங்கள் காணும் சமுதாய நிகழ்வுகளை அதாவது தீயவற்றைக் களைய வேண்டும். அந்த வகையில் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் சாலையோரத்தில் வசிக்கும் மக்களின் நிலையைக் கூறி வறுமையை ஒழித்து அனைவருக்கும் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி அடையச் செய்ய வேண்டும என்பதை உணர்த்தியுள்ளார். எந்த ஒரு கலைஞனும் தன் போல் வளரும் கலைஞனிடம் போட்டி, காழ்ப்புணர்ச்சி இல்லாது அவனது வளர்ச்சியை விரும்பிட வேண்டும். வளரும் கலைஞன் வாழ்வில் வரலாற்றை எடுத்துரைத்துள்ளார் தீண்டாமையினால் பாதிக்கப்படும் அடித்தட்டு மக்களின் வாழ்வில் ஏற்படும் சிக்கல் வழி வரலாற்றை கூறயுள்ளார். இவ்வாறு ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதையில் அடித்தட்டு மக்களின் வாழ்வியலை அவர்கள் வாழ்வில் ஏற்படும் சிக்கல் வழி வாழ்வியலை கூறியுள்ளார் என்பதினை இக்கட்டுரை வழி நாம் அறிய முடிகிறது.

## References


Andal Priyadarshini, (2009) Andal Priyadarshini Sirukathaigal, Yegam Pathippagam, Chennai

Avvai Duraisamy Pillai, S., (2010) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Kalaikalanjiyam, (1995) Tamil Valarchi Kalagam, Chennai, India.

Padmadevan, (2007) Bharathiyar Kavidhaigal, Kalishwari Pathippagam, Chennai, India.

Pascal Gilbert, (1961) Samuga Adipadai Kotpadu, Saradha Pathippagam, Chennai, India.

Subburaaj, V.V.K., (2011) Bharathiyar Kavidhaigal, Sura Pathippagam, Chennai, India.

Trevelyan, G., (1994) English Social History, The English Language Book Society Lungmans Great Britain, UK.

Varatharasanar, M., (1972) Tamil Ilakkiya Varalaru, Sahitya Academy, Delhi, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License